அனுப்ப வேண்டும்? ஆனால் இங்கே என்ன நடந்திருக்கிறது? பதிலை இங்கே வைத்திருக்கிறார்கள். அந்த முறையைச் சொல்கிறேன். இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், கேட்கப்பட்டது, என்கொயரி கமிஷன் போட வேண்டுமென்று. உண்டா, இல்லையா என்று சொல்லிவிடட்டுமே.

ஒரு குறிப்பிட்ட முதலமைச்சர் பேரிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது சட்ட மன்ற உறுப்பினர்கள் கேட்டிருப்பார்கள். அதே மாதிரித்தான் இந்த குறிப்பிட்ட விஷயத்தைப் பொறுத்தவரையிலும் தமிழ் நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் குற்றச்சாட்டுப் பட்டியலை அனுப்பியிருக்கிறார்கள் என்றால், பதில் வர வேண்டும். அல்லது, குற்றம் இருக்கிறது என்றால், கமிஷன் ஆப் என்கொயரி போட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தங்கமணி அவர்கள் பேச்சை இப்போது நிறுத்திக் கொண்டு, அடுத்தக் கூட்டத் தொடரில் தொடர்ந்து பேசலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) சட்டப் பேரவை நடப்பு கூட்டத் தொடர் நிகழ்ச்சிகள் பற்றியப் புள்ளி விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடர் முடிவுறுகின்ற இந்த நேரத்தில், பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றிய சில புள்ளிவிவரங்களை அளிக்க விரும்புகிறேன்.

1.	வினாக்கள்—போடப்பட்டு பதிலளிக்கப்பட்டவை—		
	(அ) குறுகிய காலக் கேள்விகள் ..	4	
	(ஆ) உடுக்குறியிட்டவை	480	
	(இ) உடுக்குறியிடாதவை	16	
			500
	கேட்கப்பட்ட துணைக்கேள்விகள்		2,189
2.	42-வது விதியின்கீழ் கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.		115

3.	பேரவையில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டவை.	29
4.	41-வது விதியின்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கைகள் ..	25
5.	வெட்டுத் தீர்மானங்கள்—வரப்பெற்றவை	1223
6.	அவற்றில் பேரவையில் முன்மொழியப்பட்டவை ..	218
7.	சட்ட முன்வடிவுகள்—	
	(1) பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டவை ..	12
	(2) நிறைவேற்றப்பட்டவை	12
	(3) கூட்டாய்வுக் குழுவிற்கு விடப்பட்டவை ..	3
8.	அவையில் வைக்கப்பட்ட அறிக்கைகள்—	
	(1) கூட்டாய்வுக் குழு 2	
	(2) சட்டவிதிகள் ஆய்வுக் குழு 1	
	(3) உறுதிமொழிக் குழு 1	
	(4) பொதுக் கணக்காய்வுக் குழு 3	
	(5) மதிப்பீட்டுக் குழு 4	
	(6) அவையுரிமைக் குழு 2	
		13
9.	பேரவை கூடிய மொத்த நாட்கள்	32
	மாலையிலும் கூடிய நாட்கள்	5
	மணிக்கணக்கில் பேரவை கூடிய விவரம் சுமார் 160 மணி நேரம்.	

பேரவையின் இந்தக் கூட்டத் தொடரை முடிக்கின்ற இந்த நேரத்தில், பேரவையை ஒழுங்குற நடத்திச் செல்வதற்கு பெரிதும் ஒத்துழைத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அரசாங்க அலுவலர்களுக்கும், இந்தப் பேரவை நிகழ்ச்சிகளை பொது மக்களுக்கு நல்ல முறையிலே தெரியப்படுத்தி பொது மக்களுக்கும் பேரவைக்கும் தொடர்பை ஏற்படுத்திய பத்திரிகைத் துறையினருக்கும், வானொலி நிலையத்தினருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்பாக, நம்முடைய பேரவை உறுப்பினர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ள வேண்டும். என்னுடைய புதிய பொறுப்பிலே போதிய அனுபவம் இல்லாதிருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் நல்ல பல ஆலோசனைகளைத் தந்து, குறிப்பாக கோரம் இல்லை என்ற ஒரு நிலையை உருவாக்காத அளவுக்கு மாலை நேரத்திலும் வந்து அருமையாக

1973 ஏப்ரல் 5]

உட்கார்ந்து பெருமைப்படுத்தியமைக்காகப் பேரவை உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டப் பேரவையின் இக்கூட்டத் தொடர் இந்த அளவில் முடிவுற்று, பேரவை கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 7.02 மணி அளவில் கால வரையறை யின்றி ஒத்திவைக்கப்பட்டது.

(11) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

99. Notification issued with G.O. Ms. No. 3149, Agriculture, dated the 29th December 1972, in regard to establishment of a market at Mettupalayam in Coimbatore District to provide facilities for the purchase and sale of cotton, groundnut, tobacco, turmeric, maize, sugarcane, jaggery and arecanut. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

100. Notification issued with G.O. Ms. No. 60, Co-operation, dated the 24th February 1973, in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

101. Notification issued with Memorandum No. 43354/Hg. F(1)/72–2, dated the 22nd November 1972, in regard to certain amendments to Rules under sections 35 and 36 of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971, published at pages 980 to 982 of the Tamil Nadu Government Gazette, dated the 10th November 1971. [Laid on the Table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

102. Annual Accounts of the Tamil Nadu Housing Board for the year 1965–66. [Laid on the Table of the House under section 125 (2) (*a*) of the Tamil Nadu Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]